விதி 32-ஐ 31—3—1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கொடுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குப் பெயர் கொடுத்திருந்த உறுப்பினர்களில திரு. திருநாவுக்கரசு இருக்க முடியாத சூழ்நிலையை அவரே உருவாக்கிக் கொண்டார். திரு. ஆண்டித் தேவர் இல்லை. எனவே அவர்கள் இன்றைக்குப் பேசுவதற்கு நான் கொடுத்திருந்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தவற விட்டு விட்டார்கள். மீண்டும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-25)

நாளைக்கு திரு. செ. கு. தமிழரசன், திரு. நா. சா. பழனி சாமி ஆகிய இருவரும் பேசி, அதன் பின்னர் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிற ஒரு நிபந்தனையின் அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சியினர் அந்த நிபந்தனைக்கு உட்பட்டு வந்து பேசுவார்களேயானால் அவர்களும் பேசி, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதிலுரை அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] [தமிழ், ஆங்கிலம்].

1994 மார்ச் 30

73. 1992–93–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961] 125(2)(ஏ) பிரிவின் கிழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்)

74. 1992–93–ஆம் ஆண்டிற்கான மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை [1956--ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

75. 1992–93ஆம் ஆண்டிற்கான நேசமணி போக்குவரத் துக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கிழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், (ஆங்கிலம்).

76. 1992-93 ஆம் ஆண்டிற்கான சொழன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

77. 1992—93 ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1958 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

78, 1992—93 ஆம் ஆண்டிற்கான ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் யேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

79. 1992—93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971)41பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

அ. அறிக்கைகள். அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—